# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 12.05.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். CP 2470/F/2024**

திரு. S.K.அருமைராஜ் .. புகார்தாரர்

/எதிர்/

பொதுதகவல் அலுவலர்,
உதவி இயக்குநர்,
மாநில அரசு தணிக்கைத் துறை, .. பொது அதிகார அமைப்பு
நந்தனம், சென்னை-35.

**இறுதி ஆணை**

இவ்வழக்கின் மீதான விசாரணை 07.04.2026 அன்று நேரடி விசாரணை மேற்கொண்டு பிறப்பித்த உத்தரவினை தொடர்ந்து, பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத்தகவல் அலுவலர் திரு.S.K.ராஜா, ஆய்வாளர் (தணிக்கை), இயக்குநர் அலுவலகம், மாநில அரசு தணிக்கைத்துறை, பேராசிரியர் அன்பழகன் மாளிகை, 4வது தளம், நந்தனம், சென்னை-35 அவர்கள் இன்று (12.05.2026) ஆணையத்தின் முன்பு நேரில் ஆஜராகி, மனுதாரர் கோரிய தகவல்களை 21/04/2026 நாளிட்ட கடிதம் மூலம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அதனை மனுதாரர் பெற்று ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவல் ஆகியவற்றை இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். பொதுத்தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட ஆவணங்களை பரிசீலனை செய்கையில் மனுதாரருக்கு கோரிய தகவல்கள் 21.04.2026 நாளிட்ட கடிதம் மூலம் வழங்கப்பட்டதை ஏற்று மனுதாரரின் இப்புகார் மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 2470/F/2024</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுதகவல் அலுவலர்,
உதவி இயக்குநர்,
மாநில அரசு தணிக்கைத் துறை,
நந்தனம், சென்னை-35.

**<u>புகார்தாரர்:-</u>**

திரு.S.K.அருமைராஜ்,
754/15, கீழபாறைப்பட்டி,
குருமலை அஞ்சல்,
கயத்தார் தாலுகா,
தூத்துகுடி-628714.

Copy to file: KR/PA